RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s206

# மனுஷ்யபுத்திரன் கவிதைகளில் குடும்ப உறவுகள்

கி. தென்னரசு [அ, *], செ. பாலு [அ]

[அ] தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்-608002, தமிழ்நாடு, இந்தியா.

# Family Relations in Manushyaputra's Poems

K. Thennarasu [a,*], S. Balu [a]

[a] Department of Tamil, Annamalai University, Annamalainagar–608002, Tamil Nadu, India

* Corresponding Author: thennarasu295@gmail.com

Received: 20-06-2022
Revised: 07-09-2022
Accepted: 29-09-2022
Published: 05-11-2022

Check for updates

**ABSTRACT**

The individual society is bound by the rope of the family. Human relationships begin from the single point of the family. Society is the entire group of families. Basically, the family consists of two relationships, husband and wife. Later on, the blood of the two expands into the system of continuous son and daughter. Moreover, all those who live around in families belong to family relationships. When did the system of the family appear in relationships? Research to find an answer to the question is continuing. The family system must have arisen only after the emergence of human beings. Thus, in the poems of Manushyaputran, the study of this article is only a summary of the pattern of affection in family relations and some of the changes that take place in it.

**Keywords:** Family, Relationships, Poems, Manushyaputran

## முன்னுரை

மனுஷ்யபுத்திரன் என்ற புனைப்பெயரில் எழுதி வரும் எஸ். அப்துல் ஹமீது தமிழ்ப் புதுக்கவிதை உலகில் தனித்துவ மிக்க கவிஞராகத் திகழ்ந்து வருகிறார். இவர் 1968-ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் பிறந்தார். ஆரம்பத்தில் எண்பதுகளில் கவிதை எழுத தொடங்கினார். தொடர்ந்து கவிதைகளும், விமர்சனங்களும் எழுதி வருகின்றார். தன்னுடைய மொழி நடையில் தனக்கென்று தனி இடத்தையும் பிடித்து இயங்கி வருகிறார். அவ்வகையில் மனுஷ்யபுத்திரன் கவிதைகளில் சமுதாயத்தையும் தாண்டி குடும்ப உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். குடுபங்களில் நிகழும் அழகான அன்பின் பாச பந்தத்தையும் கையிறைப் போல் திரித்து காட்டியுள்ளார். அன்பு என்ற ஒற்றை சொல்லால் குடும்ப உறவுகள் இயங்கி வருகிறது. உறவுகளை மையப்படுத்தி எழுதிய கவிதைகள் ஏராளம். அந்த வரிசையில் அம்மா, அப்பா, கணவன்-மனைவி, நண்பன், தகாத உறவு என்ற உறவுகளைப் பற்றி பல்வேறு பரிமாணங்களில் இயங்கி வருவதை இக்கட்டுரையில் மூலம் ஆராயப்படுகிறது.

## குடும்ப உறவுகள்

உலகம் மிகப் பெரிய உறவுக்கூடம். அன்பின் ஆலயம். தனியே பிறந்த நாம் குடும்ப உறவுகளோடு சமூகமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வலியோடும் வலிமையோடும் வாழக் கற்றுத் தரும் பல்கலைக்கழகமாகக் குடும்பம் திகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. நாகரிகத்தின் போக்கில் போவதாய் உலகம் நினைத்துக் கொண்டு நிம்மதியை இழந்து மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும்

இந்த நாளில் கூட தமிழகத்தில் குடுபங்களின் நிறைவு தவழ்ந்து கொண்டிருகிறது. பாதைகளற்ற இந்தப் பயணத்தில் அனுபவங்களே பாதங்கள். குடும்பம் அனைவருக்கும் நிழல் தரும் ஆலமரம், அதில் அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, தாய்மாமன், அத்தை, சித்தி, சித்தப்பா, தாத்தா, பாட்டி என உறவு விழுதிகளைத் தாங்கி நிற்கும் ஆணிவேராக அன்பு இருக்கிறது. "குடும்பம் என்பது கணவனும் மனைவியும் நம் குழந்தையோடு (சில சமயம் தங்கள் பெற்றோரோடு அல்லது உடன்பிறந்தவரோடு) கூடி வாழும் சமூக அமைப்பாகும்" என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடப்படுகிறது (Balusamy, 1992).

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பது ஔவையாரின் வாக்கு. இந்த அரிய பிறப்பைப் பெற்றுள்ள நமக்கு வாழ்க்கை ஒரு யுத்தகளமாகவே உள்ளது. மானிடனாய் பிறந்த ஒவ்வொருவருக்கும் நல்ல குணமும் தீய குணமும் கலந்தே உள்ளன. இப்படிப்பட்ட வாழ்க்கையை நிர்ணயிக்கும் பொறுப்பு குடும்பத்திற்கே உள்ளது. எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர்கள் நல்லவராவதும் தீயவராவதும் அவரவர் குடும்ப சூழலிலே உள்ளது. இத்தகைய குடும்பமானது ஒரு கதம்பம் போன்றது. இத்தகைய குடும்பத்தைப் பல எண்ணங்களும் பல வண்ணங்களும் வழிநடத்திச் செல்கின்றன. குடும்பம் ஒன்றாய் இருப்பினும் அதில் உள்ள உறுப்பினர்களின் உணர்வுகள் வெவ்வேறானவை. உணர்வுகள் வேறாக இருப்பினும் அனைவரும் குடும்பம் எனும் ஒற்றைக் குடையின் கீழ் அன்பு எனும் நிழலில் இளைப்பாறி இன்புற்றுக் கொண்டிருக்கின்றனர். "குடும்ப உறுப்பினர்களுக்கு நல்லொழுக்கம் நற்பண்பு போன்ற சமூக ஒழுக்காறுகளைக் கற்பிப்பதன் மூலமும் சமூக கட்டுப்பாட்டை ஏற்படுத்த முயலும் ஒரு நிறுவனமாகக் குடும்பம் செயல்படுகிறது. இவ்வகையில் சமூக மயமாதலின் மூலம் குடும்பம் தனது பங்கினைச் சரிவரச் செய்கிறது." என வாழ்வியற் களஞ்சியம் மூலமாக அறியமுடிகிறது (Balusamy, 1992).

உறவுகள் என்பது நம்மை பாதுகாக்கும் அழகிய வலை. ஆனால், இன்றைய நவீன உலகில் கூட்டுக் குடும்ப வாழ்க்கையை யாரும் விரும்புவதில்லை. கணவன், மனைவி, குழந்தைகள் என வாழும் இவர்கள் மத்தியில் மகிழ்ச்சியும், துக்கமும் அவர்களுக்குள்ளேயே முடங்கி விடுகிறது. இக்கூட்டுக்குள் வேறு எந்த உறவுகளையும் இவர்கள் அனுமதிக்க விரும்புவதில்லை என்ற நிலையே இன்று பெரும்பாலும் உறவுகளில் நிலவி வருகின்றது. இத்தகைய காலகட்டத்தில் குடும்ப உறவுகளின் உன்னதமான பண்புகளைப் பற்றி மனுஷ்யபுத்திரன் அவருடைய படைப்புகளின் துல்லியாக முறையில் பதிவு செய்துள்ளார். இவரது படைப்பானது தமிழ் இலக்கிய உலகில் குடும்ப உறவுகளைப் பற்றி முழுமையான படைப்பாகப் படைக்கப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது.

உறவுகளைப் பற்றி பொதுவான கருத்தை முன் வைக்கிறார். அவ்வகையில் உறவைப் பற்றி,

"இலைகள் உதிர்வது போல

மனிதர்கள் உதிர்கிறார்கள்

எந்த வருத்தமுமின்றி

கிளைகள் முறிவது போல

உறவுகள் முறிகின்றன

எந்தத் தயக்கமுமின்றி"

தெளிவான முறையில் கையாளப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இலைகள், கிளைகளுக்கு நிகராக மனித உறவுகளை உவமைப்படுத்தியுள்ளதை 'ஒரு மரத்தை வைத்துக்கொண்டு' என்ற தலைப்பின் மூலமாகப் பிரதிப்பலிக்கிறார் (Manushyaputhiran, 2019d).

## அம்மா

உறவுகளில் முதன்மையானவள் தாய். தாயின் பாசம் கலப்படமற்றது புனிதமானது உலகில் உள்ள அரும்பொருட்கள் அனைத்திலும் சிறந்தது மேன்மையானது உன்னதமானது மதிப்புமிக்கது ஈடு இணையற்றது மாறாதது அள்ள அள்ளக் குறையாதது வேறு எவராலும் தரமுடியாது எவராலும் கவர

முடியாத ஒன்று. நம்மைப் பெற்று வளர்க்க அம்மா தூக்கத்தை மறந்து, உண்ணும் உணவையும் மறந்து, பிள்ளைகள் சந்தோசமே தன் சந்தோசம் என்று வாழும் அம்மாவின் தியாகத்துக்கு ஈடு இணை வேறெதும் இல்லை. அத்தகைய ஈடு இணையற்ற அம்மா அன்பை,

“அம்மா
தன் இளம் வயது மகள்
படிகளில்
இறங்கி வருவதை
திடீரெனக் கவனிக்கிறாள்
அவள் தரையில்
நின்று கொண்டிருந்தாள்
படிகளில்
இளமையின் அதிகாரம்
மெல்ல உருண்டு வருகிறது
ஒரு பிரகாசமான முத்தைப் போல
அம்மாவுக்கு
ஒரு கணம்
துக்கம் ததும்புகிறது
அவள் இனி திரும்ப முடியாத
ஒரு காலம்
படிகளில்
ஒரு சர்ப்பம் போல ஊர்ந்து வருகிறது
அவள் அதை
ஒரு கணம் வெறுத்தாள்
இந்த உலகத்தின்
அத்தனை நன்மைகளும்
அத்தனை இன்பங்களும்
படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தன
பொறாமையில் ஒரு கணம்
அவள் கண்கள் வேறெங்கோ திரும்பின
மறுகணம் சுதாரித்துக் கொண்டு
கண்முன்னால் எப்படி
வளர்ந்து விட்டாள் என்று நினைத்தபடி
மகளின் கலைந்த கேசத்தின்
ஒரு நுனியை

சரி செய்ய நெருங்கிச் சென்றாள்"

வெளிப்படுத்துகிறது. மகள் படிகளில் அசைந்து நடந்து வரும் காட்சியைத் தாய் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். ஒரு பக்கம் பெருமிதம் இருந்தாலும் கூட மறுபக்கம் மகள் கீழே விழுந்து விடுவாள் என்ற வேளையில், தாய் சுதாரித்துக் கொண்டு மகளைப் பற்றி கொள்வது மட்டுமல்லாமல் கலைந்த முடியை சரிசெய்து விடுகிறாள். இக்கவிதையின் மூலம் பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவும் பெற்ற தாய்மார்களுக்கு மட்டுமே தெரியும் என்பதை அறியமுடிகிறது (Manushyaputhiran, 2014).

மழையில் நனைந்த மகளை,

"மழையில்

தனியாகவா வந்தாய்

என்றேன்

தலையைத் துவட்டிவிட்டு கொண்டே

இல்லை

மழையும் கூடவே

என்றாள் அம்மு"

தலையை துவட்டிவிடும் காட்சியையும், அம்மாவின் பாசத்தையும் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது (Manushyaputhiran, 2014).

அம்மா இறந்து பின்னும், தன் மகனின் கனவில் அவ்வப்போது தோன்றி மகனே நலமாக இருக்கிறாயா, உன் உடம்பைப் பார்த்துக் கொள் என்று ஒவ்வொரு முறையும் எச்சரித்துக் கொண்டிருக்கிறாள். இதனை,

"அம்மா செத்து

முப்பது வருடங்களாகின்றன

இன்னும் கனவில் வந்து

சொல்லிக் கொண்டே இருக்கிறாள்

உடம்பைப் பார்த்துக்கொள்

ஏன் இப்படி இளைத்துவிட்டாய்?

பைத்தியக்காரி

இந்த உடம்பைத் தவிர

உன் கண்ணுக்கு என்னிடம்

எதுவுமே தெரியதா?

நீ தந்த உடல் என்பதற்காக

அத்தனை கரிசம்

அதனிடம் உனக்கு"

அம்மா பிள்ளைகளின் மீது வைத்திருக்கும் பாசம் அவர்கள் இறந்து பின்னும் என்றும் மாறாதது என்பதைக் கவிஞர் மனுஷ்யபுத்திரன் 'அம்மாவின் பாசத்தை'இக்கவிதையின் மூலமாக நிரூபணம் செய்துள்ளார் (Manushyaputhiran, 2019c).

## அப்பா

குடும்பத்தில் அப்பாவிற்குத் சிறப்பிடம் உண்டு. அன்பு காட்டி வளர்ப்பது அம்மா என்றால், அறிவூட்டி வளர்ப்பது அப்பாவாகும். எல்லாப் பிள்ளைகளுக்கும் அப்பா தான் முதல் கதாநாயகன். அப்பா என்றால் அறிவு. தான் காணாத உலகத்தைத் தன் பிள்ளைகள் பார்க்கவேண்டுமென்று நினைத்தவர் அப்பாக்கள் மட்டுமே. அம்மாவின் அன்பிற்கு நிகரானது அப்பாவின் அன்பு என்பதை,

“என் செல்லமே

எப்போதும் நீ

மரத்திலிருந்து விழும்

ஒரு துளி மழையைப் போலத்தான்

என்னிடம் வருகிறாய்

மறு துளி என்னை வந்தடைவதற்குள்

இந்தக் கோடையின் பாதையில்

மூச்சிறைக்க வேகவேகமாக நடந்து

போய்க் கொண்டிருக்கிறேன்.

என் தங்கமே

இந்த இருட்டில்

ஒரு மின்மினியின் வெளிச்சமாகத் தான்

சிறு பொழுது இருக்கிறாய்

இரவெல்லாம்

மின்மினியின் வெளிச்சம்

இங்கேதான் இருந்ததென்று

அந்த இடத்தையே

பார்த்துக் கொண்டிருக்கிறேன்”

மகள் மீது அப்பா வைத்திருக்கும் அன்பையும், ஏக்கத்தையும் இக்கவிதை வெளிப்படையாக உணர்த்துவதைக் காணப்படுகிறது. அப்பாவின் அன்பு ஆழமானது. சில சமயங்களில் அந்த அன்பு ரகசியமாக இருந்தாலும் கூட அன்பை வெளிப்படையாக கையாண்டுள்ளதைத் தெள்ளத் தெளிவாகக் காணமுடிகிறது (Manushyaputhiran, 2014).

## கணவன் - மனைவி

இருமனங்கள் ஒன்று சேர்ந்து வாழும் வாழ்க்கையே கணவன் மனைவி உறவு என்கிறோம். உயிரோடு உணர்வு கலந்திருப்பதைக் கணவன் மனைவி உறவு. எவ்வகையான இரத்த உறவு இருந்தாலும் கூட ஒருவொருக்கொருவர் புரிந்துக்கொண்டு இல்லறத்தை நடப்பவர் கணவன் மனைவி என்னும் உறவு ஏனெனில் இல்லறம் சிறக்க வேண்டுமென்றால் விட்டுக் கொடுத்தல் அவசியம்.

கணவன் மனைவி உறவு முறையை வாழ்வியற் களஞ்சியம் பின்வருமாறு கூறுகின்றது. “மனவாழ்க்கையைத் தொடர்ந்து குழந்தைகள் பிறக்கிறபோது, குடும்பத்தின் அளவு மட்டுமின்றி, குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, வகைகள் ஆகியவையும் கூடுகின்றன. கணவன் மனைவி என்ற உறவோடு பெற்றோர் மக்கள் என்ற நேர்வரை உறவும், உடன் பிறந்தோர் இணைவரை உறவும் முகிழ்கின்றன. இந்த உறவுகள் குடும்பத்தை முழுமைப்படுத்துகின்றன. முழுமையான நிலையில்

குடும்பம் என்பது கணவன் மனைவி என்ற உறவு, பெற்றோர் மக்கள் என்ற நேர்வரை உறவு ஆகிய பல உறவுகள் பின்னிப் பிணைந்திருக்கத் தொகுதியாக அமைகிறது. இத்தகைய உறவுகளின் பின்னலில் இணைந்தவர்களே அடிப்படையில் குடும்ப உறுப்பினர்களாக ஆகின்றனர்" (Balusamy, 1992).

ஏனோ தன் கணவன் மன அழுத்தத்தினால் ஒவ்வொரு நாளும் தனக்கு நிம்மதி தரக்கூடிய தூக்க மாத்திரைகளைச் சேமித்து வைத்துக் கொள்கிறான். அதைக் கண்ட மனைவி,

"நான் கொஞ்சம் கொஞ்சமாகச்

சேமித்து வைத்திருந்த

28 தூக்க மாத்திரைகளை

எப்படியோ கண்டு கொண்டாள்

அதற்கு வேளை வந்துவிட்டது என உணர்ந்து

பதட்டத்துடன் வீடு முழுக்க

தேடிக் கொண்டிருக்கிறாள்

அதை நான்

எனக்கு அன்பின் பரிசாய் தரப்பட்ட

ரத்தினங்கள் என

கண்டுபிடிக்கவியலா தடத்தில்

ஒளித்து வைத்திருக்கிறேன்

எங்கு வேண்டுமானாலும் போ

யாருடன் வேண்டுமானாலும் இரு

அதை மட்டும் கொடுத்துவிடு என

கண்ணீருடன் மன்றாடுகிறாள்"

கணவனின் மீது வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தும் விதமாக இருந்தாலும் கூட மறுபக்கம் கணவனின் 'எங்கு வேண்டுமானாலும் போ யாருடன் வேண்டுமானாலும் இரு அதை மட்டும் கொடுத்து விடு' என மன்றாடும் காட்சியையும் பதிவு செய்துள்ளார் கவிஞர். குடும்பங்களில் ஆயிரம் தீராதப் பிரச்சனைகள் இருந்தாலும் கூட அதனை ஒவ்வொன்றாகப் பேசி தீர்த்துக் கொள்வது சரியான முடிவைத் தரும். வாழ்க்கை எதிர்கொண்டு வாழும் வாழ்க்கை முறையே இல்லற வாழ்க்கை என்கிறோம் (Manushyaputhiran, 2019a).

கணவன் மனைவி உறவு என்பது புனிதமான ஒன்றாகும். இருமனங்கள் கட்டுண்ட பந்தம். இம்முறையில் மனக்கசப்பு, பிரிவு என்பதற்கே இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும். குடும்பங்களில் பிரச்சனைகள் வந்தால் கூட சேர்ந்து வாழும் தம்பதியரை 'சமாதானங்கள்' என்ற கவிதையின் தலைப்பின் வழியாக எடுத்துரைப்பதை,

"செத்தாலும் இனி

உன் முகத்தில் விழிக்கமாட்டேன்

என்று சொல்லிவிட்டு

ஊருக்குப் போனவள்

பிணக்குத் தீராமலேயே

பேருந்தில் திரும்பி வந்துகொண்டிருக்கிறாள்.

நீ செத்தால் தான் எனக்கு நிம்மதி

என்றவன் சமாதாமமில்லாமலேயே

பேருந்து நிலையத்தில்

ஸ்கூட்டருடன் ஏன், பஸ் லேட்? என

பரிதவிப்புடன் நின்று கொண்டிருக்கிறான்.

வாழ்தல் என்பது

சண்டையும் சமாதானமும் மட்டுமல்ல

இன்னும் எவ்வளவோ இருக்கிறது

இருள் விலகி

இருள் மூடி

பாதைகள் மயங்கி"

காணமுடிகிறது. கணவன் மனைவி இருவரும் சண்டையிட்டு கொண்டாலும் கூட இவர்களது அன்பு உள்மனதிலிருந்து ஒருவர்க்கு ஒருவர்கள் புரிதலின் அன்பை வெளிப்படுத்தும் விதமாக இக்கவிதை அமைந்துள்ளது (Manushyaputhiran, 2019e).

## நண்பன்

நண்பர்கள் எந்த விதமான இரத்த உறவுகள் இல்லாமல் ஒன்றோடு ஒன்று சேர்ந்தே இருப்பவர்கள். நண்பன் என்றால் உயிர். நண்பன் வாழ்க்கையில் கிடைக்கும் அற்புதப் பரிசு. ஒரே வயதில் இருந்தாலும் நம்மை வழி நடத்துபவன். நம் மீது அக்கறை கொண்டவன். தீய வழியில் செல்லாமல் பார்த்துக் கொள்பவன். நமக்காக நின்று போராடுபவன். அந்தக் கடவுளுக்கே கிடைக்காத ஒரு அற்புதப் பரிசு நண்பன் என்று இலக்கணம் பாராமல் அடுக்கிக் கொண்டே போகலாம். நண்பர்களைப் பற்றி வர்ணிக்க எந்தப் பொருட்களும் இல்லை. வார்த்தைகளும் இல்லை. ஆகையால் நட்பைப் பற்றி வள்ளுவரும்,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு"

என கூறுகிறார். நண்பனுக்கு துன்பம் நேர்ந்தபோது விரைந்துச் சென்று அதனை நீக்குபவனே உண்மையான நண்பன் ஆவான் என்று வள்ளுவர் கூறுகிறார் (Puliyur Kesikan, 2008).

பல ஆண்டுகள் கழித்து அவன் நண்பனை வீட்டிற்கு வாங்களென்று அழைத்தான். என்னால் வர இயலவில்லை என்றோ ஒரு நாள் திடீரென்று நண்பனைக் காண அவன் வீட்டிற்கு வந்து விடுகிறான். அங்கு அவன் கண்களால் கண்ட காட்சியையும், மனதினால் உணர்ந்த காட்சியையும் இக்கவிதையின் மூலமாக,

"எனது பல நண்பர்களின் வீடுகளுக்கு

நான் முதன் முதலாகச் சென்றது

அவர்கள் இறந்துவிட்ட அன்றுதான்

இது என்னை அதிர்ச்சியடைய வைக்கிறது

நான் அவார்கள் முகவரியை எப்படிக் கண்டுபிடிப்பதென

தடுமாறும் போதுதான்

அவர்களுக்கு எத்தகைய நண்பனாக
இருந்தேன் என
குழப்பமடைகிறேன்
'ஒரு முறை வீட்டுக்கு வாருங்களேன்' என்று
பல முறை அழைத்த நண்பர்
நான் முதன்முறை வந்தபோது
ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார்
அவரை எழுப்பிவிடக் கூடாது என
அங்கே குழுமியிருந்தவர்கள்
வாயில் துணியை அடைத்துக்கொண்டு
மௌனமாக விசும்புகிறார்கள்
என் நண்பனுக்கு
அவர்கள் என்ன உறவு என்று கூட
எனக்குத் தெரியவில்லை
நான் துக்கம் கேட்க வேண்டிய
அதிகாரபூர்வ நபர் யாரென தொpயவில்லை
சாவென்பது
எவ்வளவு பெரிய இயலாமை
நான் கொண்டு சென்றிருந்த
தண்ணீர் சொட்டும் மலர் வளையத்தை
சலனமற்று வைக்கிறேன்
ஒரு வீட்டுக்கு முதன்முறை வரும்போது
கொண்டு செல்வதற்கு
இதைவிட மோசமான பரிசு
வேறொன்று இருக்கவியலாது
நான் முதன்முறை வந்த என் நண்பரின் வீட்டிலிருந்து
யாரிடமும் சொல்லிக் கொள்ளாமலேயே வெளியேறுகிறேன்
நான் முதன்முறை வந்த வீட்டை
கடைசியாக ஒரு முறை ஏறிட்டுப் பார்க்கிறேன்
நானும் என் நண்பரும் இனி
ஒருபோதும் அந்த வீட்டிற்கு
மறுபடி வரமாட்டோம்
அன்பே
நான் இப்படித்தான் எல்லோரையும்

வழியில் சந்தித்து

வழியிலேயே பிரிந்துவிடுகிறேன்

நாம் இருவரும் இருக்கும் போதே

உன் வீட்டிற்கு ஒருமுறை வர விரும்புகிறேன்

அந்த வீட்டில் நீ நடமாடுவதைக் காண விரும்புகிறேன்

இதோ இந்த மரச்சிற்பத்தை

எங்கே வாங்கினாய் எனக் கேட்க விரும்புகிறேன்

சுவரில் தொங்கும் உன் பால்யகால புகைப்படம்

எப்போது எடுக்கப்பட்டது எனக் கேட்க விரும்புகிறேன்

என்னை உன் வீட்டிற்கு அழைப்பதில்

நீ என் வீட்டிற்கு வருவதில்

நமக்கு ஆயிரம் சங்கடங்கள் இருக்கின்றன

ஆனால் நம்மில் யாராவது ஒருவரி இல்லாதபோது

வீட்டுக்கு வருவதன் சங்கடங்களைப்போல

அது அத்தனை துயரமானது இல்லை"

காணமுடிகிறது (Manushyaputhiran, 2019b). வாழ்க்கையில் நண்பனுக்கு நண்பன் உதவுவதைப் பார்த்திருப்போம். ஆனால் அவன் நண்பனைக் காணச் சென்றவனுக்கு இறந்த நண்பனின் உடலை மட்டுமே பார்க்க நேர்ந்தது. அவ்வளவு கூட்டத்தில் துக்கம் விசாரிப்பது என்று தெரியாமலும், அவன் ஆழ் மனதில் இவர்கள் இறந்தவனுக்கு எந்த உறவு என்று தெரியாமல் புலம்புவதையும் காணமுடிகிறது. இதனால் பால்யகால நினைவுகள் அவன் மனதில் நீங்காத அலைபோல அவன் நினைவுகள் அலைந்துக் கொண்டிருப்பதைக் கவிஞர் படம் பிடித்துக்காட்டியுள்ளார்.

மனித உறவுகளில் மிக உயர்வாக மதிக்கப்படக்கூடிய உறவு நட்பு ஆகும். சங்க காலத்தே கபிலர், பரணர் என புலவரிடையேயான நட்பாக, கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் இடையே அரசபுலவர் நட்பாக, மலைநாடனுடன் மங்கை கொண்ட நட்புகள் இருப்பதை காணமுடிகிறது. ஆனால் இன்றைய சூழலில் ஒரு சிலர் மட்டும் நண்பர்கள் பெயரை மறந்துவிடுகின்றனர். அவ்வகையில் உடல்நிலை சரியில்லாத பொழுதில் நண்பனின் பெயரை மறந்து விடுகிறான். அவனை எப்படி யாரிடம் கேட்டுக் கண்டுபிடிப்பது என்று தெரியாமல் தெருக்களில் அங்கும் இங்கும் அலைந்து திரிகின்ற காட்சியை இக்கவிதை வழியாக,

"நண்பா

நான் தனிமையில்

போக்கிடமற்றுப் போகும் போதெல்லாம்

உன்னைத்தான் அழைப்பேன்

நீயும் ஒரு முறையும்

மறுப்பேதுமின்றி

என் தனிமையின் இருட்டுக்குள்

ஒரு டார்ச் லைட்டோடு வந்துவிடுவாய்

இன்றும் உன்னை

அழைக்க விரும்புகிறேன்

என்ன வினோதம் பார்

உன் பெயர் எனக்கு

இந்தக் காய்ச்சலில் மறந்துவிட்டது

பெயர் மறந்த நண்பனை

இந்தப் பெருங் கூட்டத்தில்

எப்படி கண்டுபிடிப்பேன்?

உங்க அங்க அடையாளமொன்றை

உன் காதலியொருத்தியிடம் சொன்னால்

உன் பெயரை அவள் கண்டுபிடித்து விடுவாளா?

மனிதர்களைப் பத்திரப்படுத்தி வைக்க

அவர்களின் பெயரைத் தவிர

நம்மிடம் வேறு எதுவுமே இல்லையா?

பெயர் மறந்துபோன

நண்பனைத் தேடி

நான் ஒரு முச்சந்தியில்

ஒவ்வொரு முகமாக

பார்த்துக் கொண்டு நிற்கிறேன்"

காணமுடிகிறது. நண்பனின் பெயரை மறைந்தவனின் கதையை கவிஞர் மனுஷ்யபுத்திரன் தத்ரூபமாக படம்பிடித்துக் காட்டியுள்ளார் (Manushyaputhiran, 2019a).

வாழ்க்கை வாழ்ந்து சலித்து போய், ஒருவன் தன் மனைவியை விடுத்து, ஒருத்தி தன் கணவனை விடுத்து வேறொரு ஆணையோ பெண்ணையோ தன் வசப்படுத்தி அவர்களோடு வாழ்ந்து வரும் வாழ்க்கையே தகாத உறவு என்கிறோம். இந்தத் தகாத உறவு இந்த ஒரு நிலை மட்டும் இல்லாமல் பல்வேறு பரிமாணங்களில் செயல்படுகின்றன. இந்தச் சமுதாயம் சீர்கேடுகளுக்கு இது போன்ற உறவுகளும் காரணமாகும். வாழ்க்கை நிரந்தரம் இல்லை என்று தெரிந்தும் கூட ஆணவத்தில் அழிகின்றனர். இவ்வாழ்க்கை குற்றமென தெரிந்தும் சில காலத்திற்கு உணர்ச்சியின் இச்சைக்கு அடிமையாக வாழ்கின்றனர்.

கடற்கரையில் நிகழ்ந்த சம்பவத்தை நேரில் காண்பதைப் போல் படமாக காட்சிப்படுத்தியுள்ளார். இதனை,

"கடற்கரையில் ஒரு வாய்ச்சண்டையை

வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தேன்

ஒரு பதினைந்து வயதுப் பையன்

ஒரு ஐம்பது ஆளிடம்

வாக்குவாதம் செய்து கொண்டிருந்தான்

உன்னை நம்பித்தானய்யா

எங்கம்மா எங்கப்பாவ விட்டுட்டு வந்திச்சு

இப்ப ஆம்போன்னு விட்டுட்டுப்போனா

நியாயமாய்யா?

அம்மாவுக்காக அந்தப் பையன்

நியாயம் கேட்டுக் கொண்டிருந்தான்

அந்த ஆள் பையனிடம்

உங்க அக்கா யார் கூடவோ

ஊர் சுத்துறா கண்டிச்சு வை என்றான் கோபமாக"

இக்கவிதை தாய் செய்ய தவறை நியாயப்படுத்த விரும்பவில்லை தன் தாய்க்காக மட்டுமே போராடுகிறான் என்பதை இக்கவிதை மூலம் நிரூபணமாகிறது. இந்த மாதிரியான உறவுகள் சில காலங்களே. இதனை ஒரு சிலர் புரிந்து கொண்டு வாழ்க்கை நல்ல முறையில் வாழவேண்டுமென்று கவிஞர் உணர்த்துகிறார் (Manushyaputhiran, 2019e).

## மனிதர் - நாய்

மனிதர்கள், நாகரிகம் அடைந்த காலகட்டத்திலிருந்து அன்று முதல் இன்று வரை நாய்களை வீடுகளில் வளர்ந்து வருகின்றனர். ஆனால் ஆரம்ப காலங்களில் மனிதர்களின் பாதுகாப்பாக வளர்த்து வந்தனர். பின்பு வேட்டைத் தொழிலில் ஈடுபடுத்தினர். பின்னர் காலங்கள் மாற மாற வீடுகளில் செல்லப் பிராணிகளாகவும் பாதுகாப்பிற்காகவும் வளர்க்கப்பட்டன. வீடுகளில் தனிமையில் வாழும் மனிதர்களுக்குச் சிறந்த ஒரு பொழுதுபோக்கிற்காக கொஞ்சி விளையாடவும், பேசவும் பயன்படுத்தப்படுகின்றனர். கடந்த சில தினங்களுக்கு முன்பு ஆராய்ச்சியாளரால் நடந்த ஆய்வில் நாய்களிடம் செலவிடுவதால் மன அழுத்தத்தைக் குறைக்கின்றதைக் கண்டுபிடித்துள்ளனர்.

நாய் வளர்ப்பது உங்க உடல்நிலைக்குச் சரியானது இல்லை என்று கூறிய மருத்துவரிடம்,

"வளர்ப்புப் பிராணிகள் இருப்பது

ஆஸ்துமாவிற்கு

நல்லதல்ல

நாயை வீட்டை விட்டு

அனுப்பி விடுங்கள்

என்றார் டாக்டர்

அப்பு நள்ளிரவில்

மூச்சுவிட முடியாமல்

நெபுலைசேஷன் முகமூடியுடன்

அமர்ந்திருந்தான்

நாய்கள் எத்தனை வருடங்கள்

உயிரோடு இருக்கும்?

என்றான் டாக்டரிடம் திணறலுடன்

சுமார் பத்து வருடங்கள்

என்றார் டாக்டர்

மருந்துகளை

ஆயத்தப்படுத்தியபடி

நான் வீட்டை விட்டு போய்விட்டு

பத்து வருடங்கள் கழித்து வருகிறேன்

நாயை அனுப்ப முடியாது"

இன்று மட்டுமில்லை என்றுமே நாயைக் கைவிடமாட்டேன் என்று உறுதியாக கூறுகிறான். நாய் மனிதர்களோடு ஒன்றோடு ஒன்றாக வாழும் உயிரினம். இதனைப் பிரிக்க முடியாதது என்பதை கவிஞர் தெளிவான முறையில் விளக்கியுள்ளார் (Manushyaputhiran, 2014).

மற்றொரு கவிதையில் மனிதனும் நாயும் ஒருவருக்கொருவர் அன்பை வெளிப்படுத்தியுள்ளதை,

"கடற்கரையில்

நானும்

என் நாயும்

தியானத்தில் இருந்தோம்

யாரோ

ஒருவன் என் நாயிடம் வந்து

பேசத் தொடங்குகிறான்

என் நாய்க்கு அவனைப் பிடித்திருந்தது

அவன் வாசனையை

சிநேகத்துடன் நுகரத் தொடங்கியது

அந்த மனிதன்

நாயை இறுக அணைத்து

முத்தமிடுகிறான்

அதனுடைய

பெயர் என்ன என்றான்

வாஞ்சையுடன்

உங்களுக்கு

நாய் என்றால் அவ்வளவு

விருப்பமா? என்றேன்

அவன் மங்கலாகப் புன்னகைத்தான்

இதே போன்ற ஒன்றை

நான் பிளாட்டிற்குக் குடியேறிய போது

கைவிட நேர்ந்தது

என்றான் உலர்ந்த குரலில்

அவன் எதையோ நினைத்துக்கொண்டு

உடைந்து போகிறான்

போகும் போது

திரும்பித் திரும்பிப்

பார்த்துக் கொண்டே சென்றான்”

காணமுடிகிறது. நாய் மனிதனின் மீது வைத்திருக்கும் பாசத்தையும் மனிதன் நாய் மீது வைத்திருக்கும் பாசத்தையும் இக்கவிதை நினைவுபடுத்துகிறது. இதனால் உயிரினங்கள் மனிதர்கள் மேல் வைத்திருக்கும் அன்பு எல்லையற்றது. அன்பு மாறாதது, நிலையானது மாறாதது நிலையானது என்று கவிஞர் தெளிவான முறையில் எடுத்துரைக்கிறார் (Manushyaputhiran, 2014).

## முடிவுரை

மனித உறவுகள் குடும்பம் என்னும் அமைப்பிலிருந்து முகிழ்கின்றன. கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் என்று பேசப்படுபவற்றுக்கெல்லாம் குடும்ப அமைப்பே அடிப்படைப் புள்ளியாய் அமைந்துள்ளது. குடும்ப உறவானது ஒன்றென பலவாகப் பெருகி நாளடைவில் அவற்றின் தொகுப்பே குடும்பம் என்னும் பெயரினைப் பெற்றது. சமூகத்தின் அடிப்படையில் குடும்ப உறவுகள் அழகாக விளங்குவதால், மனுஷ்யபுத்திரனின் கவிதைகளில் குடும்ப உறவுகள் பற்றிய பதிவுகள் ஏராளமாக உள்ளன. இவரது கவிதைகள் அம்மா, அப்பா, கணவன்-மனைவி, நண்பன், தகாத உறவு, செல்லப் பிராணிகள் உள்ளிட்ட முதன்மை உறவுகளிலிருந்து தொடரும் இன்பத் துன்ப மகிழ்ச்சி நெகிழ்ச்சி நிலைகள், பிற குடும்ப உறவுகளிலும் வளர்ந்து கிளர்ந்து பரவச் செய்வதை இவ்வாய்வின் முடிவாக அமைந்துள்ளது.

## References


Balusamy, N. (1992), Vazhviyal Kalanjiyam, Tamil University, Thanjavur, India.

Manushyaputhiran, (2014) Anniya Nilathil Penn, Uyirmai Pathippagam, Chennai, India.

Manushyaputhiran, (2019a) Marma Mutham, Uyirmai Pathippagam, Chennai, India.

Manushyaputhiran, (2019b) Mouna Pani, Uyirmai Pathippagam, Chennai, India.

Manushyaputhiran, (2019c) Oru Nalil Unathu Paruvangal, Uyirmai Pathippagam, Chennai, India.

Manushyaputhiran, (2019d) Thraikku Varatha Ilai, Uyirmai Pathippagam, Chennai, India.

Manushyaputhiran, (2019e) Viral Yaanai, Uyirmai Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2008) Thirukkural Thelivurai, Paari Nilayam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License